FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318769

1. District : Tirupathur PS: VAC, Tirupathur Year: 2026 FIR No.: 06/2026 Date: 26/7/2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended by the Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 20/07/2026 Date to : 24/07/2026
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : 14.40 Hrs Time to : 15.40 Hrs
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 26/07/2026 Time : 11.00 Hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 26/07/2026 Time : 11.00 Hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் -do- Volume-II நேரம் 16.30 Hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Near Alangayam "TEA TIME" Tea Shop. North East - 38 Km.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address :
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. M. Manjunathan (b) Father's/ Husband's Name : Mani. C
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 45/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Driver (g) Address : No 4, Gudiyatham Road, Pillaiyar Koil Street, Madhanur, Ambur Taluk, Tirupathur District.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Ramakrishnan, Special Sub-Inspector of Police, Kavalur Police Station, Tirupathur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   Delay due to the Complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/07/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

26/07/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26/07/2026

Name: பெயர் (B. GOWRI)
Rank: நிலை Inspector of Police, No. எண் V&AC, Tirupathur

Attachment for Column No.12 of First Information Report in Tirupathur Vigilance and Anti-Corruption Cr.No.06/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் B.கௌரி ஆகிய நான் இன்று 26.07.2026 –ஆம் தேதி காலை 11.00 மணியளவில் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.ம.மஞ்சுநாதன், (45/2026) த/பெ. C. மணி, எண்.4, குடியாத்தம் ரோடு, பிள்ளையார் கோவில் தெரு, மாதனூர், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று, அப்புகாரின் மீது முதற்கட்ட இரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியான காவலூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் பொதுமக்களிடம் விபத்து வழக்குகளில் லஞ்சம் கோரி பெறுவதாகத் தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து, ஏற்கனவே எதிரி புகார்தாரரிடம் ஞாயிற்றுக்கிழமை (26.07.2026) போனில் பேசும்படி சொல்லியிருந்ததன் பேரில் இன்று காலை சுமார் 11.40 மணிக்கு புகார்தாரரின் கைப்பேசியிலிருந்து எதிரியை தொடர்புகொண்டபோது, எதிரி தான் முக்கிய வேலையில் இருப்பதாகவும் மாலை 4.00 மணிக்கு மீண்டும் தொடர்புகொள்ளுமாறு புகார்தாரரிடம் தெரிவித்தார். அதன்படி பின்னர் இன்று சுமார் மாலை 4.10 மணிக்கு புகார்தாரரின் போனில் எதிரியை தொடர்புகொண்டபோது, 27.07.2026 அன்று காலை 10.00 மணிக்கு ஆலங்காயம் காவல் நிலையத்தில் தன்னை நேரில் சந்திக்குமாறு கூறினார். புகார்தாரரின் புகார் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும், எதிரி திரு.ராமகிருஷ்ணன் மீது வழக்குப் பதிவு செய்யத் தக்க முகாந்திரம் இருப்பதாக முதற்கட்ட இரகசிய விசாரணையில் தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக அனுமதி பெற்று, இன்று 26.07.2026 ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் அளித்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு:– 26.07.2026 விடுநர், ம. மஞ்சுநாதன், வயது 45 த/பெ. மணி.C, #4, குடியாத்தம் ரோடு, பிள்ளையார் கோவில் தெரு, மாதனூர், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். செல்போன் நெம்பர்: 8072212799. பெறுநர், விஜிலென்ஸ் இன்ஸ்பெக்டர் அவர்கள், விஜிலென்ஸ் ஆபிஸ், திருப்பத்தூர். அம்மா,நான் மேற்குறிப்பிட்ட முகவரியில் குடும்பத்துடன்

வசித்து வருகிறேன். நான் தற்காலிகமாக பெங்களூருவில் குடும்பத்துடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். கடந்த ஏழு மாதத்திற்கு முன்தான் லோனில் KA-03-AP-6864 (Yellow Board) என்ற வெள்ளை நிற Swift Dzire காரை வாங்கி, வாடகைக்கு காரை ஓட்டிக்கொண்டு இருக்கிறேன். இதில் வரும் வருமானத்தில் தான் மாதாமாதம் கார் லோன் கட்டிக்கொண்டு இருக்கிறேன். கடந்த 18.07.2026 அன்று, என் மனைவி தேவிகா மற்றும் குழந்தைகளுடன் ஜமுணாமரத்தூர் கோடை விழாவிற்கு காரில் சென்றபோது, காவலூர் அருகே வசந்தபுரம் பகுதியில், சாலையின் ஓரம் இடதுபுறமாக நடந்துசென்ற சுமார் 75 வயதுள்ள திருமதி.லட்சுமி என்பவர் திடீரென சாலையின் வலப்புறம் வந்ததால், என் காரின் இடது பக்கக் கண்ணாடி மோதி அவர் கீழே விழுந்துவிட்டார். இதில் அவருக்கு காலில் அடிபட்டது. உடனே நான் அவரை என்னுடைய காரில் வசந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கிருந்த மருத்துவர் அருக்கு முதலுதவி அளித்து அவரை வாணியம்பாடி அரசு மருத்துவமணைக்கு ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தார். அப்போது அங்கு வந்த காவலூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் என்னுடைய பெயர் விலாசத்தை குறித்துக்கொண்டு அவரது செல்போன் நம்பர் 9498150176 கொடுத்து, அவர் அழைக்கும் போது வருமாறு கூறி என்னுடைய காரை காவலூர் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார். பின்னர் நான் பஸ்ஸில் வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று திருமதி.லட்சுமி அவர்களை பார்த்தேன். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்கு வாணியம்பாடியிலுள்ள தனியாருக்கு சொந்தமான டேவிட் மருத்துவமணையில் அட்மிட் ஆனார். அங்கு அவருக்கு மருத்துவ சிகிச்சை செலவுக்காக ரூ.5000/- பணம் கொடுத்துவிட்டு ஆம்பூரிலுள்ள என் மாமியார் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் அடுத்தநாள் 19.07.2026 அன்று சிறப்பு காவல் உதவி ஆய்வாளரிடம் நான் போன் செய்து என் வண்டி பற்றி கேட்க என் மீது கேஸ் போட்டுள்ளதாகவும் அவர் கூப்பிடும்போது வருமாறும் சொன்னார். அடுத்த நாள் 20.07.2026 மதியம் நான் காவலூர் காவல் நிலையத்திற்குச் சென்று மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளரைப் பற்றி கேட்க அங்கிருந்த போலீசார் அவரிடம் போனில் பேசிவிட்டு என்னை ஆலங்காயத்திற்கு சென்று அவரிடம் போனில் பேசுமாறு சொன்னார்கள். அதன்படி நான் ஆலங்காயம் சென்று அவரை மதியம் சுமார் 2.30 மணியளவில் எனது செல்போன் நம்பரிலிருந்து (8072212799), அவரது நம்பருக்கு (9498150176) தொடர்பு

கொண்டேன். அவர் சுமார் 10 நிமிடத்தில் அங்கு வந்து, அருகிலிருந்த TEA TIME என்ற டீக்கடைக்கு என்னை அழைத்துச் சென்றார். அப்போது, மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள், எனது காரை விடுவிப்பதற்கும், மேற்கண்ட வழக்கில் என்னை ஜாமினில் விடுவிப்பதற்கும் ரூ.15,000/- பணம் வேண்டும் என்று கேட்டார். அவரிடம் என்னுடைய குடும்ப சூழ்நிலையை எடுத்துச்சொல்லி என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர், அப்போது என்னிடம் இருக்கும் பணத்தை கொடுத்துவிட்டு செல்லுமாறும், பின்னர் அவர் என்னை செல்போனில் கூப்பிடுவதாகவும் சொன்னார். அப்போது, எனக்கு வேறு வழியில்லாததால், என்னிடம் இருந்த ரூ.2,000/- பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். பின்னர் அன்றைய தினமே மாலை மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் என்னிடம் லஞ்சம் கேட்டது தொடர்பாக, எனது மனைவி தேவிகா செல்போனிலிருந்து (6360076771) CM Helpline 1100 எண்ணிற்கு தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தார். அவரது புகாரை பதிவு செய்துகொண்டது தொடர்பாக புகார் குறிப்பு எண் (TN/HOME EXC/TPT/CC/20JUL26/1847558) குறிப்பிட்டு 30 நாட்களில் நடவடிக்கை எடுப்பதாக உடனே என் மனைவிக்கு SMS வந்தது. பின்னர் 21.07.2026 அன்று மாலை, மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை மீண்டும் செல்போனில் தொடர்பு கொண்டு, ஐயா, எனது கார் எப்போது கிடைக்கும் என்று கேட்டதற்கு அவர், இன்னும் இரண்டு நாட்கள் காத்திருங்கள் என்று தெரிவித்தார். பின்னர், 24.07.2026 அன்று மதியம் சுமார் 3.20 மணியளவில், மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை நேரில் சந்திப்பதற்காக நானும் என் மனைவியும் காவலூர் காவல் நிலையத்திற்குச் சென்று பார்க்க, அவர் அங்கு இல்லை. அவரை செல்போனில் தொடர்பு கொண்டு நான் காவல் நிலையத்திற்கு வந்திருப்பதாக தெரிவித்தேன். அதற்கு அவர், என்னை ஆலங்காயம் வருமாறு கூறினார். அதன்படி, நான் எனது மனைவியுடன் 24.07.2026 அன்று மதியம் சுமார் 3.40 மணியளவில் ஆலங்காயம் சென்று ஏற்கனவே அவர் வந்த TEA TIME டீக்கடையில் இருந்து அவரிடம் செல்போனில் பேசினேன். சிறிது நேரத்தில் அவர் அங்கு வந்தார். அப்போது, அவர் என்னிடம், கேஸில் பறிமுதல் செய்யப்பட்டுள்ள எனது காரை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் காண்பித்து விடுவிப்பதற்கும், அந்த கேஸில் என்னை கைது செய்து ஜாமினில் விடுவதற்கும், அவருக்காக ரூ.3,000/- மற்றும் காவலர்களுக்காக ரூ.3,000/- என மொத்தம் ரூ.6,000/- பணம் வேண்டும்

என்று கேட்டார். மேலும், எனது ஆதார் அட்டை, இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், வாகனத்தின் ஆவணங்கள் மற்றும் எனக்கு ஜாமீன்தாரர்களாக இரண்டு நபர்களையும், அவர்களது ஆதார் அட்டைகளையும் எடுத்துக்கொண்டு திங்கட்கிழமை வந்து அவரை பார்குமாறும், அவ்வாறு வருவதற்கு முன் ஞாயிற்றுகிழமை அவரிடம் செல்போனில் பேசுமாறும் சொன்னார். அதற்கு நான், ஐயா, என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று எனது குடும்ப சூழ்நிலையை எடுத்துக்கூறி, பணத்தை குறைத்துக் கொள்ளுமாறு அவரிடம் கெஞ்சி கேட்டதற்கு அவருக்காக ரூ.3,000/- மற்றும் போலீஸாருக்கு ரூ.2,000/- என மொத்தம் ரூ.5,000/- கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று சொல்லி எங்களை அனுப்பிவைத்தார். அப்போது அவரை எங்கு வந்து பார்க்க வேண்டும் என்று கேட்டபோது ஞாயிற்றுக்கிழமை என்னிடம் போனில் பேசிவிட்டு திங்கட்கிழமை காலை ஆலங்காயம் காவல் நிலையத்திற்கு வந்து அவரை பார்க்குமாறு சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. அவர் என்னிடம் இலஞ்சமாக கேட்ட பணம் ரூ.5000/- கொண்டு வந்துள்ளேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்கும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.இப்படிக்கு, (Sd/- XXXX) M.Manjunathan.26.07.2026.

Sir, Received a Tamil written complaint on 26.07.2026 at 11.00 hrs. (Sd/- XXXX) 26.07.2026 (B.Gowri) Inspector of Police, V&AC, Tirupathur.

Sir, After verifying the antecedents of the accused and credibility of the complainant on 26.07.2026 at 16.30 hrs registered a case in Tirupathur Vigilance and Anti-Corruption Crime No.06/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 (Sd/- XXXX) 26.07.2026 (B.Gowri) Inspector of Police, V&AC, Tirupathur.

The FIR in original along with the written complaint sent to the Hon'ble District and Sessions Judge, Tirupathur and sent the other copies to the officers concerned.

26/07/2026

(B. GOWRI)
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur